★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 15 முஹறம் 14 இதழ் 261

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1-11-82



முக்கிய அறிவித்தல்

வட இலங்கைச் சதுரங்கக் கழக நிதிக்காக வீரசிங்கம் மண்டபத்தில் இன்று (1-11-82) நடைபெறவிருந்த

(1) 'அபசுரம்'

(2) 'குருஷேத்திரோபநேசம்'

நாடகங்கள் பின்போடப்பட்டுள்ளது.

செயலாளர்

5011


## பாக். ஜனாதிபதி இந்திய விஜயம்

இஸ்லாமாபாத் அக். 31 பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் நாளை திங்கட்கிழமை இந்தியாவிற்கு விஜயம் செய்கிறார்

பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் பாக். ஜனாதிபதி உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்,

இப்பேச்சு வார்த்தையின் போது ஜம்முகாஷ்மீர்பிரச்னை, இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பிரச்னை, பாகிஸ்தான் ஆயுத பலம் ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றபதவிப்பிரமாணம் குட்டிமணிக்கு நீதிமன்றம் அனுமதி அளிக்குமா?

(கொழும்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தேர்தல் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட 'குட்டிமணி' என அழைக்கப்படும் எஸ். யோகச்சந்திரன் பாராளுமன்றம் சென்று பதவிப்பிரமாணம் செய்ய சிறைச்சாலை ஆணையாளரினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

பாராளுமன்றம் சென்று பதவிப்பிரமாணம் செய்ய தன்னை அனுமதிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளரை குட்டிமணி கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதாகவும் இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவு கிடைக்காமல் குட்டிமணியை சிறைச்சாலைக்கு வெளியே அனுமதிக்க முடியாது என்று சிறைச்சாலை ஆணையாளர் குட்டிமணிக்குப் பதிலளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனை ஆட்சேபிக்கும் வகையில் குட்டிமணி பாராளுமன்றம் சென்று தனது கடமையை நிறைவேற்ற தடைசெய்யவேண்டாமென்று கோரி நீதிமன்றத்தில் 'மண்டமஸ் ரிட்' மனு குட்டிமணியின் சட்டத்தரணிகளினால் இவ்வாரம் தாக்கல்செய்யப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்திலமட்டுமே, குட்டிமணி (வட்டுக்கோட்டை எம்.பியாக) பாராளுமன்றம் சென்று பதவிப்பிரமாணம் எடுக்கலாம்.

# சிறிமா மீது சி. ஐ. டி. பொலிஸார் விசாரணை!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, இரகசியப் பொலிஸாரினால் நீண்ட நேரம் விசாரணைசெய்யப்பட்டார். திருமதி சிறிமாவோவின் மருமகன் திரு. விஜயகுமாரதுங்காவும் சி. ஐ. டி. பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டார்.

ஜனாதிபதி தேர்தல்தினத்தன்று, போலி பங்கீட்டு அரிசிக் கூப்பன் புத்தகங்கள் பெருமளவில் விநியோகம் செய்யப்பட்டது தொடர்பாகவே மேற்படி விசாரணை நடைபெற்றதாகத் தெரியவருகிறது ஏற்கனவே இது தொடர்பாக திரு ஹெக்டர் கொப்பேகடுவ நான்காவது மாடியில் சி. ஐ. டி பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டது தெரிந்ததே.

இவ் விசாரணையில்; கூப்பன் புத்தக விநியோகம் தொடர்பாக தமக்கு எதுவுமே தெரியாது என்று திருமதி சிறிமாவோ வாக்குமூலத்தில் தெரி

[8-ம் பக்கம் பார்க்க]

## "சர்வஜன வாக்கெடுப்பை நிராகரித்து தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டும்!"

### தமிழ் காங்கிரஸ்செயற்குழு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

"அரசாங்கம் பொதுத்தேர்தலைத் தவிர்ப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பை நடாத்துவதால் அக்கோரிக்கையை நிராகரித்து தமிழ் பேசும் மக்கள் வாக்களிக்கவேண்டும்" என்று தமிழ்மக்களை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியின் செயற்குழு நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக்காரியாலயத்தில் சட்டத்தரணி ஆர். சிவபாதசுந்தரம் தலைமையில் நேற்றுக் காலை இச்செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

கட்சியின் செயற்குழு உறுப்பினரும், யாழ் மாநகரசபை அங்கத்தவருமான சட்டத்தரணி எஸ். செல்வராசா கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். யேசுதாசன் வழிமொழிந்தார்.

அந்தத் தீர்மானத்தில் 1983ல் ஆவணி மாதத்துக்குப் பிந்தாமல் நடத்தப்படவேண்டிய பாராளுமன்ற பொதுத் தேர்தலைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் கையாளும் சர்வஜன வாக்கெடுப்பு தவறான நடவடிக்கை எனக் கண்டிக்கிறது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பல தீய சக்திகளின் இடையூறுகளுக்கும் மத்தியிலும் தமிழினத்தின் சார்பில் போட்டியிட்ட தமிழ் இன வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலத்தை ஆதரித்து தமிழ் ஈழ லட்சியத்தை நிலைநாட்ட துணிந்து நின்று வாக்களித்த தமிழ் பேசும் மக்களுக்கு தமிழ்க் காங்கிரஸ் நன்றி தெரிவிக்கிறது" என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

(மா)

## பனைமரம் முறிந்துவிழுந்து இளைஞர் ஸ்தலத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

அந்தியேட்டிக் கிரியைகளுக்காக கீரிமலை செல்லவிருந்தவர்கள் மீது பனைமரம்முறிந்து வீழ்ந்ததால், ஒரு இளைஞர் ஸ்தலத்தில் பலியானார்! மற்றொரு இளைஞர் படுகாயமுற்றார் அப்புலிங்கம் மனோகரன் (23 வயது என்பவரே ஸ்தலத்தில் பலியானவராவார். எஸ், செல்வராசா (22 வயது) என்பவரின் இடது தோள் மூட்டில் படுகாயம் ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

திருநெல்வேலியில் இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது,

[8ம் பக்கம் பார்க]


THINKING COMPUTERS?

— Starting in November —

COMPUTER PROGRAMMING

by American qualified lecturer

—Use our computers from the first week—

★ SCHOLARSHIPS FOR THE BEST FIVE ★

Write for free brochure to

SOFTWARE CONSULTANCY

427, Temple Road, Nallur, Jaffna.

(4597)

## மங்களகரமான திறப்புவிழா





கொழும்பு யூனிவேர்சல் ரெலெக்ஸ்

வெளிநாட்டு நேரடி தொலைபேசி சேவையினர்

தமது கிளையை 01-11-82 முதல்

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றனர்.

காலம் 01-11-82 திங்கட்கிழமை

காலை 11-00 மணி முதல் 12-00 வரை சுபவேளை

திரு. தேவநேசன் நேசையா

(யாழ். அபிவிருத்திச்சபை செயலாளர்- அரசாங்க அதிபர்)

அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்

குறைந்த கட்டணத்தில் எமது பணிவான சேவையில்

உங்கள் தொலை தொடர்புகளை துரிதமாக வழங்குவதே

எமது சேவை

யூனிவேர்சல் ரெலெக்ஸ் வெளிநாட்டு

நேரடி தொலைபேசி சேவை

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 23006 - 23100

தலைமையகம்:

யூனிவேர்சல் ரெலெக்ஸ் 41, கனல்ரோ, கொழும்பு.

ரெலெக்ஸ்: 21852, 21672, 21736, 22006

போன்: 547032, 548316, 548310 549122, 549123

(5001)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சுத்தமான யப்பானிஸ் ஸ்பிற்ஸ் மூன்று மாதக்குட்டிகள் விற்பனைக்குண்டு ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்துக்கு முன்னல் உள்ள சங்கக்கடைக்கு அண்மையில் சேவியருடன் தொடர்பு கொள்ளவும். 5008

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவமுள்ள விற்பனையாளர்களும், கவுண்டர் கிளாக்ஸ்களும் உடனடியாகத் தேவை. (ஆண்கள் மட்டும்). கல்விப் பொதுத்தராதரம் (சாதாரணம்) பரீட்சையில் சித்தி பெற்றவராயும், ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல எழுத்து எழுதக் கூடியவராயும், நாற்பது வயதுக்குட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். தகைமைகள் அனுபவங்களுடன், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4984 ஈழநாடு மே/பா யாழ்ப்பாணம். 4984

## WANTED

Wanted a Female Secretary for a reputed firm in Karainagar. Applicants should be under 40 years with an excellent knowledge of Secretarial Work and must be an efficient English Typist. Attractive salary would be offerd for the right person. Application in biodata should be addressed to Advt. No. 4993, C/o Eelanadu Jaffna. Closing date of application 6-11-82. 4993

Wanted experienced and energetic Sales Officers under 40 years with English knowledge for a leading Hard ware and Sanitary ware establishment in Jaffna town. Apply before 9-11-82 Advt. No: 5003, C/o Eelanadu, Jaffna. 5003

## இடைக்கட்டளை அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை.

கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சதாசிவம் மகேசனின் மரண சாதனமற்ற சொத்துக்களின் பரிபாலனம் சப்பந்தமாக

கந்தையா சதாசிவம் மகேசன் சைம்பெண் ஆனந்த மகேஸ்வரி, கொழும்பு, தற்காலம் பருத்தித்துறை
— மனுதார்

தத்துவ எதிர் நியாயாதிக்க
இலக்கம்; 1158

பராயமற்றவர்கள்

1. மகேசன் கோகுலன்
2 மகேசன் குகன்
3. மகேசன் மகள் ஸ்ரீதர்சினி – மூவரும் பருத்தித்துறை

தங்களின் வழக்குப் பாதுகாவலன்

4 கதிர்காமர் யோகராசா, இல; 30, Hudson வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி. — மூலம்
— எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றுர்.


1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

க. செல்வராசா
பதிவாளர்.

வரைவு:
மனுதாரின் சட்டத்தரணி.
4990

## இரண்டாவது நினைவுஆண்டுஅஞ்சலி



சின்னையா முத்துக்குமாரு
(நகை அடைவு பிடிப்பவர்)

தோற்றம்: 10 - 5 - 1907 மறைவு: 23 - 10 - 1980

துயருடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்
5004

# "காங்கிரஸைக் கலைத்து கூட்டணியில் சேருமாறு குமாருக்கு அழைப்பு!"

## தமிழ் மகளிர் பேரவை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

'தமிழ்ஈழ இலட்சியத்துக்காக ஒற்றுமைப்பட்ட தமிழினம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் நம்பிக்கை வைத்து அதன் தலைமையில் இயங்கி வருகிறது. த. வி. கூ. நிதானமாக தமிழ்மக்களை வழி நடாத்தி வருகிறது இவ்வொற்றுமையை சிதறடிக்கும் முயற்சியில் கிலர் ஈடுபட்டு வருவது மிகவும் வேதனைக்குரியதாகும் இவ்வகையாக ஒற்றுமையைக் குலைப்பவர்கள் தாமும் தமிழ் ஈழத்துக்காகப் பாடுபடுவதாக கூறி வருவதுதான் கவலைக்குரியதாகும்''

தமிழர்விடுதலைகூட்டணியின் தமிழ் மகளிர் பேரவை செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது உரும்பிராய்ப் பகுதிதமிழ் மகளிர் பேரவைக் கிளை மேற்கண்ட கருத்துக்களைக்கொண்ட அறிக்கை ஒன்றைக் கூட்டத்தில் சமர்ப்பித்தது

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம் பி யுமான திரு எம் சிவசிதம்பரத்தின் அலுவலகத்தில் இச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒரு அங்கமாக இணைந்துவிட்ட தமிழ்க் காங்கிரஸ் சுக்குப் போட்டியாக மக்களைப் பிளவுபடுத்தும் வகையில் வேறொரு 'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்' என்ற ஒரு கட்சியை வைத்துக்கொண்டிருப்பவர் திரு. குமார் பொன்னம்பலம். இந்த அகில இலங்கைக் கட்சியின் கொள்கை ஒற்றையாட்சியாகும். ஆனல் திரு. குமாரின் கொள்கை தமிழ்ஈழம். இந்த இரட்டை நிலையை நினைத்து அழுவதா? சிரிப்பதா?

இக்குழப்பத்திலிருக்கும் திரு. குமார் தன்னுடைய கட்சியை ஒழுங்காக நடாத்துவதை விட்டுவிட்டு த. வி. கூட்டணியை எவ்வாறெல்லாம் நடக்கவேண்டுமென்று வேறு அறிக்கை விடுத்துவருகின்றுர்.

த வி. கூட்டணி மிகவும் அனுபவம்வாய்ந்த தலைவர்களினல் வழிநடாத்தப்படுவதுமாத்திரமல்ல எல்லாப் பிரச்னைகளையும் முறையான அமைப்புக்களான செயற்குழு, பொதுக்குழு என்பனவற்றில் தீர்க்கமாக ஆராய்ந்தே முடிவெடுக்கின்றது. இவ்வகையான இயக்கத்துக்கு வெளியிலிருக்கும் திரு. குமார் அறிவுரை கூறுவது விந்தையான செயலாம்.

'இனிமேலாவது த. வி. கூ வுக்கு இலவச ஆலோசனை கூறுவதை விடுத்து உண்மையில் தமிழீழ இலட்சியத்தில் அக்கறையிருந்தால் தமது கட்சியைக் கலைத்துவிட்டு த வி. கூட்டணியில் சேர்ந்து உழைக்கும்படி தமிழ் மகளிர்பேர[illegible] கேட்டுக்கொள்கிறது.

'தமிழ் மக்களுக்[illegible] குமார் பொன்னம்ப[illegible] யக்கூடிய மிக உயர்ந்[illegible] இதுவொன்றுதான் [illegible] மகளிர் பேரவை முழுமைய[illegible] நம்புகிறது.' (மா[illegible]

## 18,000 ரூபா வசூல்

சென்னை அக் 31

தமிழ் நாட்டில் பலஇடங்களில் டிக்கட் இல்லாமல் பஸ்களிலும் ரயில்களிலும் பிரயாணம் செய்தவர்களிடமிருந்து டிக்கட்பணமாகவும் அபராதமாகவும் சுமார் 18,000 ரூபா வசூலிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து சென்ற பாடசாலை சேவை பஸ்ஸில் சட்டவிரோதமான பிரயாணம் செய்த 26 பேரிடமிருந்து 8,060 ரூபா வசூலிக்கப்பட்டது. [க]

## ஐ. நா.தீர்மானம்: கம்பூச்சியா நிராகரித்தது

லண்டன் அக். 31

கம்பூச்சியாவிலிருந்து வெளிநாட்டுத்துருப்புக்கள் வெளியேற வேண்டும் என்ற ஐ. நா. தீர்மானத்திற்கு வியட்னும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென வியட்னும் பிரதிநிதி யொருவர் தெரிவித்தார்,

இத்தீர்மானம் இளவரசர் சிகனுக்கு ஓரளவு ஆதரவாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இத்தீர்மானத்தை கம்பூச்சியா அரசு முற்றுக நிராகரித்துள்ளது.

## ஊரடங்கிய நேரத்தில் திருடர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த நேரத்தில் சுன்னுகம் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள குளிர்பானக் கடை உடைக்கப்பட்டு விலை உயர்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பிரதான வீதியிலுள்ள 'சிவாஸ்கூல்பார்' என்ற கடையிலேயே இத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றது

28-ம் திகதி பிற்பகல் ஊரடங்குச் சட்டம் காரணமாக கடை உரிமையாளரான சோமசுந்தரம் சிவம் என்பவர் மாலை 6 மணிக்குக் கடையைப் பூட்டிவிட்டுச் சென்றுள்ளார். அவர் அடுத்தநாள் காலை 6 மணிக்குவந்து பார்த்த பொழுது, கடையின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு, தகரக் கதவும், அடுத்துப் போடப்பட்டிருந்த பலகைக்கதவும் கழற்றப்பட்டுக் கடைக்குள்ளிருந்த பெறுமதியான 'கசட்' ரேடியோவும், சிகரட்வகைகளும், பால்மா வகைகளும் களவாடப் பட்டிருந்தனவாம்.

இத்திருட்டை நடத்தியவர்கள் அங்கிருந்த குளிர்சாதனப் பெட்டிக்குள்ளிருந்த கு[illegible] பானங்களையும் குடித்துவிட[illegible] அரைகுறையாக காசாள[illegible] மேசையில் 'கிளாசு[illegible] வைத்துவிட்டுச் சென்றுள்[illegible]ராம்.

இத்திருட்டுச் சம்பந்தமா[illegible] கடை உரிமையாளர் சு[illegible]கம் பொலிசில் புகார்செய்[illegible]ளார். குளிர்பானம் அருந்தி[illegible] கிளாசிலுள்ள கைவிரல் அடையாளங்களை, கைரேகை அடையாள நிபுணர்கள் பதிவுசெய்துள்ளனர். சுன்னுகம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

## வரவேற்பும் பொதுக்கூட்டமும்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச ஆசிரிய சம்மேள[illegible]னப் பிராந்திய பிரதிநிதி திரு. குர்ஞைசிங் அவர்களுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கக் காங்கேசன் துறைக் கிளை நாளை மா[illegible] யூனியன் கல்லூரியில் வ[illegible]வேற்புக் கூட்டம நடத்த உள்ளது. இக்கூட்டம் பண்டிதர் செ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## மீட்கப்படாத அடைவுப்பொருட்களின் ஏலவிற்பனை

மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளையில் 1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 06-ம் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு 1982ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் திகதிவரை மீட்கப்படாத நகைகள்யாவும் 1982ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி காலை 10-00 மணியளவில் காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளைக் கட்டிடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும் என்பதை அறியத் தருகின்றேம்.

பிரதேச முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம். 22-10-1982 4949

## இன்று நடக்கும் கருத்தரங்கு

(அரியாலை)

இலங்கை கிறிஸ்தவ ஆசிரிய சங்க யாழ்ப்பாணக்கிளையின் ஆதரவில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் இன்று ஆசிரியர்களுக்கான ஞானஒடுக்கமும் கருத்தரங்கும் நடைபெறுகின்றன.

காலை 9 மணிக்கு திருவிருந்து ஆராதனையுடன் ஆரம்பமாகும் இந்த ஞான ஒடுக்கத்தி[illegible] அருட்திரு டி, சி இரத்தி[illegible]சிங்கம் அடிகளாரின் [illegible] நிகழ்ச்சியும், அருட்திரு ஐச[illegible] செல்வரத்தினம் அடிகளார் அருட்திரு சேவக் சாம் அ[illegible]பிரட் அடிகளார் ஆகியோரி[illegible] அருளுரைகளும் இடம்பெறு[illegible] முடிவு ஆராதனையை ஹா[illegible]லிக்கல்லூரி அதிபர் திரு டபிள்யு என். எஸ். சாமுவேல் நடத்துவார். (அ)

## வெளிநாடுகளுக்கு

# 2,100கோடி டாலர் அமெரிக்க ஆயுதங்கள் விற்பனே!

## சவூதி அரேபியாவிற்கே கூடுதல் ஆயுதங்கள்!!

வாஷிங்டன், அக் 31

அமெரிக்கா இந்த ஆண்டுடாலருக்கு வெளிநாடுகளுக்கு வெளிநாடுகளுக்குப் பெருந் தொகையான ஆயுதங்களே விற்பனேசெய்ய விருப்பதாக பாதுகாப்புத் திணேக்களம் அறிவித்துள்ளது.

சவூதி அராபியாவே ஆகக் கூடுதலான ஆயுதங்களேக் கொள்முதல் செய்யவிருக்கிறது.

செப்டம்பர் 30–ம் திகதி வெளியான புள்ளி விபரத்தில் இந்த விபரம் காட்டப்படாதபோதி ... இராணுவத்தின் பூர் ... அறிகையில் தெரிவிக் ...ட்டுள்ளது.

இந்த வருடம் 2100 கோடி ஆயுதங்கள் விற்பனேசெய்யப் படவிருக்கிறது. இது கடந்த வருடத்திலும் பார்க்க 700 கோடி டாலர் அதிகமாகும்.

சவூதி அரேபியா 500 கோடி டாலருக்கு ஆயுதங்களேக் கொள்முதல் செய்யவிருக்கிறது.

81—82–ம் ஆண்டு, விற்பனே குறைவாக இருக்கும் என முன்னர் தெரிவிக்கப்பட்ட போதிலும் ஜனதிபதி றீகனின் விருப்பத்தின் பேரில் இந்த விற்பனே இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

கிழக்கு மேற்கில் அமெரிக்காவுக்குச் சார்பான நாடுகளுக்கும் எதிர்காலத்தில் அமெரிக்காவைச் சாரும் நாடுகளுக்குமே இந்த ஆயுத விற்பனே நடைபெறவிருக்கிறது.

## போலந்தில் வேலை நிறுத்தம்:

# அதிமேற்றிராணியார் பலத்த கண்டனம்!

லண்டன், அக். 31

போலந்தில் தடைசெய்யப்பட்ட சொலிடாறிற்றி தொழிற்சங்கத்திற்கு ஆதரவாக நவம்பர் மாதம் 10–ம் திகதி நடைபெறவிருக்கும் வேலைநிறுத்தத்திற்கு அதிமேற்றிராணியார் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைநிறுத்தத்தினல் பொருளாதார நிலைமை மோசமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

திருச்சபை சார்பில் அதிமேற்றிராணியார் வேலைநிறுத்தம் பற்றித் தெரிவித்த முதலாவது கருத்து இதுவாகும். இதற்கு முன்னர் ரோமாபுரியிலுள்ள பாப்பரசர் அருளப்பர் சின்னப்பருடன் அவர் பேச்சு நடத்தியிருந்தார் எனக் கூறப்படுகிறது. (க)

## குகையில் ஓவியங்கள்

சென்னே, அக். 31

கோயம்புத்தூரில் உள்ள குகையொன்றில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ஓவியங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குகையில் 800 மீட்டர் உயரத்தில் இந்த ஓவியங்கள் வெள்ளே நிறத்தால் வரையப்பட்டிருந்தன.

6 பேர் கைகோர்த்த படியும் யானேயில் ஒரு வீரனும், மான் கூட்டங்களும் இந்த ஓவியங்களில் காணப்பட்டன. (க)

# இராணுவச் சட்டத்தை மீறியதாக 96வயதான 'எல்லே காந்தி' கைது!

கராச்சி, அக் 31

'எல்லேக்காந்தி' என்று அழைக்கப்படும் 96 வயதான கான் அப்துல் கமார் கான் நேற்று இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

அரசியல் கூட்டங்கள் நடத்தக்கூடாதென்ற இராணுவ சட்டத்தை மீறிய 2 வாரங்கள் அரசியல் வட்டாங்களில் பேசினார் என குற்றஞ்சாட்டின்பேரில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் பல காலம் இருந்தபின்னர் அவர் அவர் சமீபத்தில்தான் பாகிஷ்தான் வந்திருந்தார்.

அவர், கைதுசெய்யப்பட்டபின் இராணுவ பாதுகாப்பு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (க)

## பொலிஸாருக்கு வீடுகள்

புதுடில்லி அக். 31

தமிழ்நாடு பொலிஸாருக்கு வீடுகள் அமைப்பதற்கு அரசு 2 கோடி 38 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. 6 இடங்களில் சுமார் 446 வீடுகள் அமைக்கப்படும். [க]

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்

ஒட்டாவா அக் 31

அணு ஆயுத உற்பத்தி அதிகரிப்பை எதிர்த்து கனடாவில் நேற்று சுமார் 5000 பேர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்கள். [க)

## மக்களுக்கு அர்ப்பணம்

புதுடில்லி, அக், 31

"நாடுகளிகும், தேசியங்களுக்கும் இடையிலான நட்புறவுக்கும், கூட்டுழைப்புக்கும் சிறந்த எடுத்துக்காட்டு கிருஷ்ணநதி மின்னுற்பத்தி நிலையம்"

என பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று ஆந்திராவில் கிருஷ்ணநதி மின் உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்து பாரத மக்கள்க்குச் சமர்ப்பணம் செய்யும் உரையில் கூறினர்.

இத்திறப்பு விழாவுக்குசுமார் 10 லட்சம் மக்கள் கூடியிருந்தனர் பிரதமர் திருமதி காந்தி தமதுரையில் மேலும் கூறியதாவது; "முன்னுள் பிரதமரும் எனது தந்தையுமான ஜவாலால் நேரு நாடுகளுக்கும் தேசியங்களுக்கும் இடையே பாரதத்தை நட்புறவு கொள்ளவைத் தமையின் அறுவடையே இத்திட்டமென்பதை நினேவு படுத்துகின்றேன்" (உ)

## குடிநீர் ஏற்பாடு

சென்னே அக். 31

கோயம்பூத்தூரில் இலவச சத்துணவு திட்டத்தின் கீழ் குடிநீர் வழவகுவதற்காக தமிழ்நாடு அரசு 5 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (க]

## டாக் அதிபரிடம் இந்திராகாந்தி கோரிக்கை

புதுடில்லி அக் 31

சுகவினமுற்றிருக்கும் முன்னுள் பாகிஸ்தான் அதிபர் பூட்டோவின் மனேவியான திருமதி பூட்டோவை சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கோரியுள்ளார்.

பாகிஸ்தான் ஜனதிபதிக்கு திருமதி இந்திராகாந்தி எழுதியுள்ள கடிதமொன்றில் மனிதாபிமான முறையில் இதனே கவனத்திற்கு எடுத்துகொள்ளுமாறும் உள்நாட்டு விவகாரத்தில் தலேயிடுவதாகக் கருதகூடாததென்றும் தெரிவித்துள்ளார். [க)

## 1984 டிசம்பரில்

# ராஜராஜசோழனின் 1000 ஆண்டு நினேவுவிழா!

சென்னே, அக். 31

ராஜராஜ சோழனின் 1000 ஆண்டுநினேவு விழாவை பெரியளவில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

அந்தவிழா 19 4ம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ்நாடு எங்கும் கொண்டாடப்படும் என அமைச்சர் ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

தஞ்சை பெரியகோவிலுக்கு மின்விளக்கு இணேப்புக்கு 1 லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் 32,800 கோவில்கள் இருப்பதாகவும், தஞ்சையில் மட்டும் 5000 கோவில்கள் இருப்பதாகவும் இக்கோவில்கள் சீரமைக்க நடவடிக்கை எடுக்கக்படும் என்றும் அவர் தெரிவித்தார்

கோவில்களேசீரமைப்பதற்கு மடாதிபதிகளும், அறங்காவலர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும், அநேகமான கோவில்களுக்கு போதிய வருமானம்இல்லாமல் இருப்பதாகவும், இதனேச்சீர்செய்யவேண்டும் என்றும் அவர் கூறினர்.

## நைஜீரியாவில்

# வெளிநாட்டவர் வேலேபெற கட்டுப்பாடு!

லண்டன், அக். 31

நைஜீரியாவில் வெளிநாட்டவருக்குவேலேவாய்ப்பு அளிப்பதற்கு அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது.

இதனே நைஜீரியா உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அல்ஹாஜ் ஹிலி பாபா தெரிவித்தார்.

வெளிநாட்டவர் வேலே வாய்ப்புப் பெறுவதற்கும் தற்போது வேலேசெய்பவர்களின் சேவையை நீடிப்பதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டிற்கு வர்த்தக கைத்தொழில் நிறுவனங்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன. (க)


வடமாகாண மக்களுர்கு ஓர் நற்செய்தி.....

**நஷனல் - NATIONAL**

**SONY - சொனி**

கறுப்பு-வெள்ளே-வர்ணத் தொலேக்காட்சி பெட்டிகளே மிகக்கூடிய கழிவு விலேயில் பெற்றுக்கொள்ளவும்.....

★ சென்னே (Madras) ★ ரூபவாகினி

நிகழ்ச்சிகளே மிகத் தெளிவாகவும், கவர்ச்சிகரமாகவும் காணக்கூடியவகையில் T. V. ஏரியல் (ANTENNA) அமைத்துக்கொள்ளவும்.....

உத்தரவாதமும் நம்பிக்கையும் மிக்க ஸ்தாபனம்

**சி. சின்னத்துரை அன் பிரதர்**

39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தந்தி : "கல்கி" தொலேபேசி : 22183 - 22184


## ஈராக் தாக்குதல்:

# 15 பேர் பலி; வீடுகள் சேதம்!

லண்டன், அக். 31

வலேகுடாவில்தெற்குமேற்கு பிராந்தியத்தில் ஈராகி தீவிரமாக தாக்குதல் நடத்தியுள்ளதாக தெஹ்ரான் வானெலி அறிவித்துள்ளது.

நீண்டதூரம் பாயும் குண்டுகளே, ஈராக் துருப்புக்கள் வீசியதால் 15 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் விமானங்கள் குண்டு வீச்சுநடைபெற்றபோது ஈராகி விமானங்களே துரத்தி அடித்ததாக கூறப்படுகிறது. இத்தாக்குதலின்போது பல வீடுகள் சேதமடைந்தன. (க)

## உலக சிக்கன தினம்

லண்டன், அக் 31

உலகசிக்கனதினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது சிக்கனமாக வாழ்வதுபற்றிய கருத்தரங்குகள், கூட்டங்கள், பிரசாரங்கள் நடைபெற்றது. (க)

## விவசாய நிலேயம்

வஷிங்டன் அக் 31

சிறகு அவரை ஆராய்ச்சி மாநாடு ஒன்று வாஷிங்டனில நடைபெற விருக்கிறது. சர்வதேச விவசாய ஆராய்ச்சி நிலேயம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. (க)

### மணிவாக்கு

தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்கு பதிலாகத் தலையால் நடப்பதை ஒக்கும்.

—எமர்ஸன்

## நமது நோக்கு

# உறுதியான ஒழுக்கம் வேண்டும்

''நாச்சியார் நினைத் தூட்டுவதொன்று: யான் நினை துண்பதொன்று'' என்பது பழைய வாசகம்.

நாச்சியார் அன்னத்துக்கு மிச்சமென்று தவிட்டுக் கழியை ஊட்ட, அடிமை இதனை இப்போது உண்பதால் பின்பு சோற்றை அதிகமாக உண்ண வயிறு இடந்தரும் என்று நினைத்து உண்டான் என்பது கருத்து,

உலக நாடுகளில் பஞ்சத்தால் வாடும் பட்டினிப் பட்டாளத்துக்கு என்ன செய்வதென்று திண்டாடுகிறது ஐ. நா. நிறுவனம்.

பசி, பட்டினி மட்டுமல்ல பொருளாதார வீழ்ச்சியால் ஏற்படும் வறுமை அது உண்டுபண்ணும் அறியாமை, நோய் போன்ற கொடுமைகளை உலக ரீதியில் விரட்டியடிக்க முயல்கின்றது இந்த உலக ஸ்தாபனம்.

இந்த உயரிய, பரந்த நோக்கங்களை நிறைவேற்ற எழுந்த ஐ. நா. உபகிளைக்கு செல்வநாடுகள் வேண்டிய அளவு உதவி செய்ய முன்வராமலிருப்பது இன்றைய புதிய நிலை அதற்குக் காரணம்: ஐ. நாவில் பெரும்பான்மையோர் வறிய நாடுகள்; அவர்கள் எழுப்பும் அவலக்குரல்கள் பெரும்பான்மை வாக்காயிருந்தும் வெறும் வாய்வெற்றியையே அது கொண்டு வருகிறது. தீர்மானங்கள் செயல்களாக மாறுவது அரிதினும் அரிது

நடைமுறையில் வறிய நாடுகளுக்கு செல்வந்த நாடுகள் உதவவேண்டுமானல், சுதந்திரப் பலத்திலிருந்து இவ்வித உதவியை நாட முடியாதென்றும், வறுமையில் வெறும் வாய்சப்பும் ஏழைகளுக்குஎவ்வித பிரதி உபகாரமுமின்றி எங்கள் செல்வத்தை எடுத்து நீட்டவா இந்த நிறுவனம் உருவானதென்ற நிலை, அதனை வெளிப்படுத்தும் மனப்பான்மை ஐ. நா வின் 37-வது ஆண்டு முடிவில் சர்வதேச தொடர்புகளில் பிரதிபலிக்கின்றன.

உலக யுத்தத்துக்கு ஆயத்தமாகும், அல்லது யுத்தம் எவர் தொடக்கினலும் நாம்ஆயத்தம் என்ற உணர்வைக் கொண்ட செல்வ நாடுகள் உலக வறுமையை நீக்க உதவமாட்டாவென்பது சொல்லாமலே விளங்கும்,

இந்தப் பின்னணியிலே உலக உணவுதினம், உலக சுகாதாரதினம், நேற்று உலகனைத்தும் கொண்டாடப்பெற்ற உலக சிக்கனத்தினம், எவ்வளவு நன்மைகளைச்செய்ய முயன்றபோதும் உலகளவிலே அவை வெறும் கண்துடைப்புகளே! ஒருவன், ஒருநாடு பசியால் வாடுவதை அனுதாபத்துடன் அணுகும்உறுதியான ஒழுக்கம் இன்றேல் சர்வதேச அமைதி ஒரு முயற்கொம்பு

எங்கள் நாட்டை ஒரு உதாரணமாகக் கொண்டால், வறுமையை நீக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் உருப்படியான திட்டங்கள் எவற்றில் இன்றுவெற்றிகண்டிருக்கின்றோம்.

அரிசியின் விலைதெரியாமல் பண்டைக்கால மன்னர்கள்போல வேற்று நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யும் விவகாரங்களைப் பறைசாற்றுகின்றோம். ஒரு தடவை அரிசி ஏற்றுமதி செய்துமிருக்கின்றோம். கடன்பட்டும் ஒருமாளிகையை அமைத்துவிட்டால் அதனைக்கொண்டு மேலும் கடன்வாங்கிச் சீவிக்கலாமென்ற சித்தாந்தம், அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி – பொதுமக்களிடமும் காணப்படுவது வியப்பல்ல இதனை உணரத்தவறும் சமூகம் சுதந்திர சமூகமாகாது.

சிக்கனத்தைப் பற்றி ஏழைநாடுகளுக்கு போதனை செய்வது பொருத்தமா? செல்வநாடுகளுக்கு இங்கிருந்து வேலைதேடிப் படையெடுப்பவர்கள் அங்கு தம் வறிய நிலையை மறவாது பொருள்தேடி நாடுதிரும்பியதும் சேமித்த செல்வத்தை சுயமுயற்சிகளில் முதலீடுசெய்வது உண்மையில் செயற்படுகின்றதா?

உழைத்த பொருளோடு பலர் வாழ்வில் டாம்பீக வாழ்வும் தொற்றிவிடுவதால் அது 20+20—50 என்ற கணக்கில் முடிவதுண்டு. வந்தவெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அள்ளிக்கொண்டு போவதுமுண்டு.

உழைக்கும் வழியை ஏற்படுத்தி ஒருவர் குடும்பம் குடிக்கக்கஞ்சி கிடைக்கும் கட்டத்தில் அந்தக் குடும்பத்துக்கு சிக்கனம் தானகவே வரும்.

அந்தப் பெருமுயற்சியில் கவனம் செலுத்தாமல், விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளில் மாபெருந்திட்டம் தீட்டி அதன்முடிவு ஆணுபெண்ணு என்று அறியுமுன்னரே வாழ்க்கைத்தரத்தைஉயர்த்தும் பேச்சும், ரூபவாகினியின் தேசிய சேவையும், உயர்ந்த உணவு, உடை அலங்காரமும், பொதுமக்களுக்கு சுவை கொடுக்குமளவில் தேசியவாழ்வு தோற்றமளித்தால், சிக்கனத்துக்கு இடமேது? ஒழுக்கமற்ற போலிக்கௌரவமே மிச்சம்.

மாபெருந் திட்டங்களிலே செலவிடும்நிதி ஒழுக்கமற்ற நிர்வாகத்தால் தனிப்பட்டவர்களுக்கு செல்வவாழ்வு வாழ உதவுகிறது இதனை இன்று அரசு விசனத்துடன் அவதானிக்கிறது.

செல்வர்கள் பெருஞ்செல்வர்களாக உதவும் பொருளாதாரம், ஏழைகள் அவரைப்போல் தாமும் செல்வராகவேண்டுமென்ற உணர்வைத்தூண்டுகின்றது. இவ்வாறே அரசியல்வாதிகளென்ருலென்ன, நிர்வாக உத்தியோகத்தர்களென்ருலென்ன தொழில்துறையிலீடுபடும் 'புள்ளிகள்' என்ருலென்ன தம்பொருளாதார நிலையை உயர்த்திவிடமுயல்கின்றார்கள், நாட்டின் செல்வத்தையல்ல தொழிலாளியின் மேம்பாட்டையல்ல.

சிக்கனம் நாட்டின் ஏழைகளுக்கு, உலகில் ஏழை நாடுகளுக்கு மற்றவர்களுக்கல்ல; சுதந்திரம், மதிப்பானவாழ்வு எல்லோருக்குமென்ருல் என்ன கருத்து? பட்டினி கிடக்கச்சுதந்திரம்; மற்றவர் பரிகாசம் செய்யும் மதிப்பு என்பதே.

யாழ். நகரில் எரிந்த

# 15கடைகளும் தற்காலிகமாக கட்டிக்கொடுக்கப்படும்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ் பெரியகடையில் தீ விபத்தால் எரிந்து சாம்பரான 15 கடைகளுக்கும் பதிலாக தற்காலிக கடைகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்னும் தீர்மானம் யாழ். மாநகராட்சி மன்றத்தில் கொண்டுவரப்பட்டு ஒரு உறுப்பினரின் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகராட்சி மன்றத் தலைவர் திரு இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் கடந்த 14-ம் திகதி இரவு யாழ், பெரியகடையில் எரிந்த 15 கடைகளை மீண்டும் சீமெந்துக் கட்டிடமாகக் கட்டிக் கொடுப்பதென நிதிக்குழு சிபார்சு செய்தது குறித்து ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது'

தலைவர் திரு. விசுவநாதன் விவாதத்தை ஆரம்பித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது:

''எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம் எரிந்த கடைகளைப் பார்வையிட்டு ஆணையாளருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, இக்கடைகளைக் கூடிய கெதியில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுனெக் கேட்டுக்கொண்டார். யாழ் எம் பி திரு வெ. யோகேஸ்விரன், கோப்பாய் எம். பி. திரு ஆ. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் இதுவிஷயத்தில் அக்கறை கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

''பாதிக்கப்பட்ட கடைக்காரர்களும், பாதுகாப்புக்காக இக்கடைகளை சிமெந்துக் கட்டிடமாகக் கட்டித்தர வேண்டுமென மகஜர் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதனை மராமத்துக்குழுவுக்கும் நிதிக்குழுவுக்கும் சமர்ப்பித்திருந்தும், மராமத்துக்குழு கூடாதபடியால், நிதிக்குழுவின் பரிசீலனையின் பின் இவ்விடயத்தை உங்கள் முன்வைக்கின்றேன்'' என்றார்.

திரு ஆ. துரைராஜசிங்கம்: யாழ். மாவட்டத்து கே முக்கிய இடமாகப் பெரியகடை இருக்கிறது. வியாபாரத்தைத் தொடர்ந்து நடாத்த வழி செய்யவேண்டும். தற்போதைய காலகட்டத்தில் உடனடியாக இவற்றைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் இருப்பதால் சிமெந்தால் கடைகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். வாழைக்குலைக் கடைகளுக்கும் எரிந்து கட்டிக்கொடுக்கும் 15 கடைகளுக்கும் இடையில் 'ப' வடிவத்தில் சிமெந்தினல் சுவர் ஒன்று கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு கடைக்கும் இடையில் தகரத்தாலோ, அஸ்பெஸ்டஸ் சீட்டாலோ தடைகள் போடலாம். நவீன சந்தையின் 3-ம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படும்போது குறிப்பிட்டபடி கட்டப்படும் கடைகளைத் தவிர்த்துக்கட்டலாம்.''

திரு. துரைராஜசிங்கத்தின் கருத்தை திரு. எஸ் சண்முகநாதன் (மணி), திரு. என். டி. செல்லத்துரை, திரு. தியாகராசா, திரு ஜனுப் பா. ஷா. முகிதீன்பிச்சை, திரு. யோ. அ. செல்வநாயகம், திரு. செ. எட்வேட், திரு. எஸ் சண்முகராசா ஆகியோர் ஆதரித்துப் பேசினர்.

ஜனுப் ஷாகுல் ஹமீட் இக்கருத்தை எதிர்த்துப் பேசினர்.

### பண்டிகைக்ள் காலத்துக்கு கட்டமுடியாது

''தற்காலிகமாக சிமெந்தினுல் கடைகள், மதில் கட்டுவதென்பது முடியாத காரியம். இதற்கு அதிககாலம் எடுக்கும் வியாபாரம் செய்யவேண்டிய பண்டிகைக் காலங்களுக்குள் இத்திட்டத்தின்படி கடைகள் கட்டிமுடிக்க முடியாது 77-ம் 81-ம், 82-ம் ஆண்டு ளில் கூட இக்கடைகள் எரிந்திருக்கின்றன

சிமெந்தால் கடைகள், மதில் சுவர்கள் கட்டுவதை வரவேற்கிறேன். ஆனல் ஒவ்வொரு கடைக்கும் இடையில் சிமெந்தினல் தடைச்சுவர்கள் கட்டி எழுப்ப வேண்டும்'' என்று ஜனுப் சாகுல் ஹமீட் பேசினர்.

### சுகாதார சீர்கேடு குறித்து புகார்

யாழ். மாநகரத்தின் சுகாதாரசீர்கேடுகள் குறித்து திரு. எஸ். சிறிலும், திரு. என் டி. செல்லததுரையும் கண்டித்துப் பேசினர்.

''யாழ்ப்பாணத்தில் குப்பை கூளங்கள் தேங்கிக் கிடக்கின்றன. குப்பைகளை அள்ளிக்கொண்டு செல்லும் லொறிகள் குப்பைகள் இல்லாத இடங்களில் பாதையோரங்கள் தோறும் சிந்திக்கொண்டே செல்கின்றன என்று தெரிவித்த திரு சிறில் சாக்கடைகளில் கூட சேறு சகதிகள் தேங்கி நுளம்புகள் உற்பத்தியாகின்றன என்றும் துர்நாற்றம் வீசுவதாகவும் சொன்னர்,

''வீதிகள் துப்பரவு செய்வோரின் வேலைகளைக் கவனிப்பதற்கு உத்தியோகத்தர்கள் இல்லாததால், தொழிலாளர்கள் தன்னிச்சைப்படி நடக்கிறர்கள் என்றும், வீதியோர மின்கம்பங்களில் அதிகமான மின்பல்புகள் அணைப்பாரில்லாமல் இரவு பகலாக எரிந்துகொண்டிருக்கும் அதேவேளையில் சில இடங்களிலுள்ள மின்கம்பங்களில் வெளிச்சம் ஏற்றுவதே இல்லை என்றும் திரு. சிறில் சொன்னர். (மா

# சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஒரு பண்டைய உபாத்தியாயர் கூட்டம்

## அவர்களது அன்றைய ஏற்பாடுகள் நிறைவேறுமா?

[நேற்றைய தொடர்ச்சி]

தமிழர்களுள்ளே ஒற்றுமையின்மை பொருமையென்னுமிரண்டுமே முக்கியமான தீக்குணங் ளென்று எங்கும் எவரும் பேசுவதை எவருமறிவர். ஆயினும் அப்படி பேசுகிறவர்களிடத்தும் அத்தீக்குணங்கள் பொருந்தியேயிருக்குப். அன்று கூடிய உபாத்தியார்களனைவரும் இத்தீக்குணங்களையெல்லாம் சுட்டெரித்த சாம்பராக்கியவர்கள் போலவேயிருந்தார்கள். அன்று அவர்கள் ஒருவரோடு ஒருவர் அன்புபாராட்டி உறவுகொண்ட ஐக்கியத்தைக் கண்டவரெவரும் வியந்து பாராட்டினர். நெடுநாட் பிரிந்திருந்த பிள்ளையைக்கண்ட தாயின் மனமும் உடலும் பூரித்தவாறே பூரித்தனர் இக்கூட்டத்துக்கு ஏழாலைச்சைவ பிரகாச வித்தியாலயத்தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவர் அக்கிராசனதிபதியாயும் வீமன்காமத்துச் சுப்பிரமணியவரோதய வித்தியாசாலைத் தலைமையுபாத்தியாயர் ஸ்ரீ. வி வேலுப்பிள்ளை இலேகராகவும் வரிக்கப்பட்டுக் கூட்டத்தை நடாத்திஞர்கள். உபாத்தியாயர்கள் பேசியவிஷயங்கள் எல்லாம் அவர்கள் தங்கள் கடமைகளை உள்ளபடி உணர்ந்து நடாத்துபவர்களென்பதைத் தெளிவுறக்காட்டின. பெரியவர்களாய் வருகிற சிறுபிள்ளைகளுக்கெல்லாம் அறிவை யூட்டுகிறவர்களுப்,

**ச. அம்பிகைபாகன்**

நல்லொழுக்கங்களைப் போதிக்கிறவர்களும், பழகுகிறவர்களும் அவர்களே. அதனல் சிறுவர்களுக்குக்கடவுளுக்கு இரண்டாவதாயுள்ளவர்கள்உபாத்தியாயர்களே

''எழுத்தறிவித்தவனிறைவனுகும்'' என்பர் அத்தன்மையுடைய உபாத்தியாயர்கள் அன்று கூடியதினல் ஒருவர் அறியாததை மற்றவர் அறியவும் படிப்பிக்கவேண்டியவிதங்களை ஒருவரிடத்திருந்து ஒருவர் வினவிக்கிரகிக்கவும் ஏதுவாயிருந்தது அது மட்டா தங்கள் வித்தியாசாலைகளிலேஉயர்ந்த இலக்கண இலக்கியங்களும் சங்கீதம், சரீரமுயற்சி முதலியனவைகளும் கற்பிக்கவும் செய்விக்கவும் வேண்டுமென விளங்கிக்கொண்டார்கள். அரசினருதவிபெறும் வித்தியாசாலைகளிலே அவர்கள் சட்டப்படிக்கு வேண்டிய பாடங்களைப் படிப்பிக்கும் நேரம் நீக்கி, மற்றைய நேரங்களிலெல்லாம் சமயப்பாடங்கள் படிப்பிக்கவேண்டுமென விளக்கித்தீர்மானித்துக் கொண்டார்கள். சைவபரிபாலன சபையாலாகும் பயனையும் சபையோடெவ்வாறு தொடர்புடையர்களாயிருந்து சபையை விருத்திசெய்யவேண்டுமென்பதையும் நன்குவிளங்கிக்கொண்டார்கள். சென்ற க-ம், உ-ம் வருஷக் கூட்டங்களிலே செய்த சில நிர்ணயங்களின் படி எல்லாவுபாத்தியாயர்களும் நடக்கிறர்களாவென வினவி நிர்ணயப்படி நடப்பதை ஒவ்வொருவரு மறிந்து சந்தோஷித்துக் கொண்டார்கள். இவ்வித்தியாசாலைகள் பற்பல மனேச்சர்களுக்குள்ளிருப்பினும் அவை

5ம் பக்கம் பார்க்க]

கோழி முட்டையிட்ட இடத்தில்

பாம்பு குடிகொண்டிருந்தது

# இளம் பெண்ணின் பரிதாப மரணம்!

(மட்டுவில்)

கோழிமுட்டையை எடுக்க வைக்கோல் போருக்குக்கீழ் கையை விட்ட இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவர் நாகம் தீண்டி மரணமானார்.

இவரின் உயிரைக் காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

இப்பரிதாப சம்பவம் மட்டுவிலையடுத்த கல்வயல் என்னும் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

30 வயதான ஜெகஜோதி பரமேஸ்வரி என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இப் பரிதாப மரணத்திற்குள்ளானவராகும்.

சம்பவதினம் காலை வைக்கோல்போரின் கீழ் கோழி முட்டை இட்டுவிட்டது என்று எண்ணிக்கொண்டு முட்டையை எடுக்க, வைக்கோல் போருக்குக் கீழ் ஜெகஜோதி கையை வைத்தார் என்றும் உடனே ஐயா ஏதோ குத்தி விட்டது என்று கதறியபடி கையை வெளியே எடுத்தார் என்றும் இது பற்றித்தெரிவிக்கப்பட்டது.

விஷகடிக்கான முதலுதவிகள் செய்யப்பட்டு உடனடியாக ஜெகஜோதி விஷக்கடி வைத்தியரிடம் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அவ இறந்து விட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [அ]

## கைதடி இளைஞர் சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

கைதடி ஆயுர்வேதவைத்திய சாலை வார்ட்டுகளுக்கு யாழ். மாவட்ட இளைஞர்க்கழகங்களின் சம்மேளனத்தலைவர் திரு. ச. தங்கராசா தலைமையில் கைதடி இளைஞர் அபிவிருத்திக்கழககத்தினர் சிரமதான மூலம் மூன்று தினங்களாக வர்ணம் பூசினார்கள் இதற்கானமைகளையும் கைதடி இளைஞர் அபிவிருத்திக்கழகமே அன்பளிப்புச் செய்திருந்தது.

இச்சிரமதானப்பணியில் ஈடுபட்டவர்களுக்குக் கழகத்தின் செயலாளர் திரு. என். கே. துரைசிங்கம் பாராட்டும் நன்றியும் தெரிவித்தார். [உ]

கிளிநொச்சி

## விவசாயிகளுக்கு பாராட்டு

[கிளிநொச்சி]

"எதற்கும் அரசின் உதவியை எதிர்பார்க்காமல் இளைஞர்களும், யுவதிகளும் விவசாய முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடவேண்டும்"

இவ்வாறு ஸ்கந்தபுரம் இளைஞர் விவசாய சழகத்தினால் நடத்தப்பட்ட உழவர்விழாவின்போது உரையாற்றுகையில் வடபிராந்திய விவசாய உதவிபணிப்பாளர் திரு. எஸ். ஜெயரெத்தினம் குறிப்பிட்டார்.

ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ் கலவன்பாடசாலையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ஜெயரெத்தினம் மேலும் பேசுகையில்; கிளிநொச்சிப்ரதேசம் அதிகவிவசாயிகள் நிறைந்த இடம் என்றும் இங்குள்ள விவசாயிகள் அதிக ஊக்கத்துடா செயற்பட்டுவருவது பாராட்டிற்குரிய செயலாகும் என்றும் கூறினர்.

திரு. குமாரசாமி திரு. கே. மகாலிங்கம ஆகியோர் உட்பட்டபலர் உரையாற்றனார்கள். [க]

## பயிற்சிப் பரீட்சை

(அரியாலை)

உதைபந்தாட்ட மத்தியஸ்தப் பரீட்சை யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஆதரவில் சங்கத்தலைவர் திரு. இ. கனகலிங்கம் தலைமையில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்று வரும் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் பயிற்சியாளருக்கான பயிற்சிப் பரீட்சை இம் மாதம் 7-ந் திகதி நடைபெறவிரும்பதாகச் சங்கத்தின் துணைச் செயலாளர் திரு. எஸ். ஜெயரத்தினம் தெரிவித்தார்.

## இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வாரிவனேஸ்வரம் சிவன்கோவிலில் ஸ்ரீ கேதாரகௌரி விரத தின இலட்சார்ச்சனை விழா இம் மாதம் 5ம் தேதி ஆரம்பமாகும். (க)

## சைவத்தையும்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கலை ஒரே வழிப்படுத்திப் போதனசக்தி வித்தியாசாலை ஒன்று நம்முன் ஸ்தாபித்துக் கொள்ளவேண்டியது அவசியமெனத் தீர்மானஞ்செய்து கொண்டார்கள் மறுவருடக் கூட்டத்தைக் கூட்டுவதாகும் நடாத்துவதற்கும் ஒரு சபை ஏற்படுத்தி அச்சபைக்குவேண்டிய விதானங்களையுஞ்செய்து அன்று அச்சபையைக் கூட்டி வைத்தவர்களுக்குத் துதி கூறி இதுவரையில தங்களைக் காப்பாற்றி இக்கூட்டத்துக்கு வந்து கூடிக்கொண்டாடிச் செல்லுமாறு அனுக்கிரகஞ் செய்த முழுமுதற் கடவுளாகிய சிவபிரானருக்குத் தோத்திரஞ் செய்து இவ்வாறே மற்றய வருடக்கூட்டங்களுக்கும் வந்து கூடுமாறு தங்களுக்கனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து பிற்பகல் ஏழு மணிக்குச்சபை சமாப்தி பெற்றது.

இவ்வுபாத்தியாயர்கள் அன்றிருந்த உற்சாகத்தோடு வேலைபார்த்து வருவார்களானல் மற்ற வருஷத்துக்குள் வெகு நன்மைகள் உண்டாகி விடும்.

அவர்களன்று செய்து கொண்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுவார்களென்றே நம்புகின்றேன்.

வல்வெட்டித்துறை பெண் கடத்தல் வழக்கு:

# "கலியாண வீட்டிற்கு ஜெயராஜ் வரவில்லை"

## இளம் பெண் சாட்சியம்

(புலோலி)

ஜெயசங்கரும், ரவிசங்கரும் நான் படித்த பாடசாலையில் இரண்டொரு வகுப்புக்கள் கூடுதலாகப் படித்தார்கள். நான் ஜெயசங்கர், ரவிசங்கர் ஆகியோருடன் சிறுவயதில் கூடி விளையாடினேன் என்பது ஞாபகமில்லை. எனது சகோதரன் அசோக்குமார் படிக்கும் போது இந்த இரண்டுபேரும் அவருக்கு நண்பர்களாகஇருந்திருக்கலாம். இப்போதும் நண்பர்களோ என்பது எனக்குத் தெரியாது."

இவ்வாறு வல்வெட்டித்துறை பெண் கடத்தல் வழக்கில் சாட்சியமளித்த கடத்திச் செல்லப்பட்ட இளம் பெண்ணான ஈஸ்வரபாதம் சரோஜினி எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகமனோகரனால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பாது குறிப்பிட்டார்.

இப்பெண்கடத்தல் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. சட்டத்தரணி கனகமனோகரனால் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்பட்ட சாட்சி குறிப்பிட்டதாவது,

"நான் எஸ்.எஸ் ஸி வரை படித்திருக்கிறேன் எனக்கு 19 வயதுமுடியாதநிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. இவ்வழக்கின் 1ம் எதிரியை சிறிதுகாலத்திற்கு முன்பே எனக்குத்தெரியும்.

உலகுடைய பிள்ளையார் கோவிலையும் கொன்றைக் கட்டை ஒழுங்கையையும் இணைக்கும் பாதை நீதவான் பணிப்பின பேரில் திறக்கப்பட்டது எனக்குத்தெரியாது 1ம் எதிரியின் தந்தையார் வீடு பாலா மாஸ்டரின் வீடுகொன்றைக்கட்டை ஒழுங்கையில் இருக்கின்றது"

இக்கட்டத்தில் 2ம், 6ம், 9ம் எதிரிகள் சார்பில்ஆஜரானசட்டத்தரணி திரு வி. செல்லத்தம்பி இந்த வழக்கில் 1ம் சாட்சி சாட்சியம் கொடுக்கும் பொழுது அந்த சாட்சியத்தில் தகப்பனார் ஈஸ்வரபாதத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் அந்த ஈஸ்வரபாதம் இன்று இந்த வழக்கு நடந்துகொண்டிருக்கும்போது மன்று விருந்தையில் நின்று சாட்சியங்களைக்கவனித்துக் கொண்டிருக்கிறார் என்றும் மன்றின்கவனத்திற்கு கொண்டு வந்தார்.

சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாயா சட்டத்தரணி குறிப்பிட்ட ஈஸ்வரபாதம் என்ற நபர் இவ்வழக்கில் சாட்சிப்பட்டியலில் இல்லை என்றும் சாட்சியாகக் குறிக்கப்படவில்லை என்றும் அதுடன் ஈஸ்வரபாதத்தை தான்வழக்காளிதரப்பு சாட்சியாக கூட்பிட மாட்டேன் என்றும் வழக்கை நிரூபிக்கும் பிரகாரம் சாட்சியாகக் கூப்பிடமாட்டேன் என்றும் மன்றுக்குத் தெரிவிக்கின்றார்.

சரோஜினி மேலும கூறியதாவது; நான் படித்தபள்ளிக்கூடத்தில் ஜெய்சங்கர், ரவிசங்கர் ஆகியோர இரண்டொரு வகுப்புகள் கூடுதலாகப்படித்தார்கள். வீடுகளும் அயல்அயலில் அமைந்திருக்கின்றன. நான்அவர்களுடன்சிறுவயதில் கூடிவிளையாடினேன் என்பது ஞாபகமில்லை. அவர்களது முழுப்பெரும் எனக்கு நெடுங் காலமாகத்தெரியும் எனது சகோதரன் பெயர் அசோக்குமார் அவர் வெளி நாட்டில் கப்பலில் வேலை செய்து கொண்டிருக்கிறார். அவர் படிக்கும் போது இந்த இரண்டு பேரும் நண்பர்களாக இருந்திருக்கலாம். இப்பொழுது நண்பர்களோ எனக்குத் தெரியாது. சகோதரிபத்மினியின் கலியாணம் எனக்கு ஞாபகமுண்டு, அன்னம், தாமரை போட்ட ஒரு அலங்கார வளைவு போடப்பட்டது. கலியான வீட்டிற்கு ஜெயசங்கர்வரவில்லை. அக்கலியான வீட்டிற்கு வேண்டிய அலங்காரவளைவுகளை அவர்கள் செய்தார்களோஎன்பது எனக்குத் தெரியாது.

இக்கட்டததில் 1-ம், 4-ம் எதிரிகளுக்காக ஆஜரான சட்டத்தரணி திரு. கனகமனோகரன் சாட்சியை மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு தவணைதரும்படி கேட்டார்.

அத்துடன் இந்த வழக்கின் சான்றுப்பொருட்களாகக் கொண்டுவரப்பட்ட வான் வண்டியை பிணையில்கொண்டு சென்றவர் இன்று அதை மன்றுக்கொண்டுவரல்லை. ஆகவே அந்த வாகனத்தைப் பிணையில் எடுத்துச்சென்றபிணையாளிக்கு விருந்து பிறப்பிக்கப்பட்டது. அதுடன் வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தர்களான டேவிட, யோகராசா ஆகியோர் இந்த விருந்தை நேரடியாகச் சென்று நிறைவேற்றவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது.

சட்டத்தரணி திரு. எஸ். சிவனருள் சுந்தரம் வான் சொந்தக்காரருக்காக ஆஜராகி தான் அவரைக் கோர்ட்டில் வெளிப்படுத்துவதாகவும் விருந்தை விடவேண்டாம் என்றும் கோர்ட்டைக் கேட்டார். இதனல் விருந்து நிறுத்தப்பட்டது.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## வன்னியில் வரவேற்பு

(வவனியா)

ஜனதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலத்துக்கு வன்னியில் வரவேற்பளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது.

## கட்டாக்காலிகளை பிடிக்கநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணை கமநலசேவைப்பிரிவில் பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கிராமம்தோறும் கட்டாக்காலி மாடுகளைப்பிடிப்பதற்கு மாடு பிடிகாரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வப்பகுதி பயிறசெய்கைக்குழுகள் ஊடாக இந்த நியமனங்கள்வழங்கப்பட்டுவருகின்றன.

கட்டாக்காலி மாடுகளை இலகுவாகவும், கஷ்டமில்லாமலும் பிடிப்பதற்கு ஏற்றவகையில் மாடுபிடிக்கும் வலை ஒன்றையும் வேலணை கமச்செய்கைக் குழுவின் தலைவர் கொடுத்துதவநடவடிக்கை எடுத்துள்ளார். அவ்வப்பகுதி பயிற்செய்கைக் குழுக்கள் ஊடாக மாடுபிடிக்கும் இந்த வலை பிடிகாரர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. வலை மூலம் மாடுபிடிக்கும் இந்த நவீன முறையைக்கொண்டுவந்து பயிர்களைப் பாதுகாக்க துரித நடவடிக்கை எடுத்துள்ளதை வேலணை மேற்கு கிராமோதய சபையின் தலைவர் பாராட்டியுள்ளார். (வண.நி)

## சேவைக்காலப் பயிற்சி

(வவனியா)

ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சிநெறி நவம்பரில் நடைபெறவுள்ளது.

வவனியா மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கான இந்த சேவைக்கால பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தபயிற்சிநெறி ஆரம்ப கீழ்ப்பிரிவு, ஆரம்பமேற்பிரிவு என இருவகையாக இடம்பெறவுள்ளது.

பயிற்சி வகுப்பின் இறுதி தினத்தன்று பாடசாலை அதிபர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது.

இதுதொடர்பான விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கைகளை வவனியா பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு பொ. சிவபாதம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (க)

## இலங்கையில் குவைத் பத்திரிகையாளர்

(கொழும்பு)

உலகின் பணக்கார நாடான குவைத்நாட்டின் பிரதான பத்திரிகைகளினைச் சேர்ந்த 4 பத்திரிகையாளரைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்குவந்து முதலீட்டு வாய்ப்புகளை ஆராயவுள்ளதாக இலங்கையின் தூதுவராகக் குவைத்தில் கடமைபுரியும் ஜனுப் ஹமீட் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகையாளர் குழு கட்டுநாயக்க சுதந்திரவர்த்தக வலையத்துக்குள்ளும் வெளியேயும்குவைத் முதலீடுகளை முதலீடுசெய்யும் வாய்ப்புகளையும் இரத்தினக்கற்களின் [illegible]கம் உல்லாசப் பயணத்துறை ஆகியவைகளையும் ஆராய்வதற்குள்ளார்கள். [உ]

இது பண்டிகைக்காலம்! அனைவருக்கும் வசந்தகாலம்!!

புதுமனை புகுவிழா, திருமணம்

அனைத்து வைபவங்களுக்கும் உங்கள் இல்லங்கள் புதுப்பொலிவுற தரமான புதிய டிசைன் மரத்தளபாடங்களுக்கு...

டில்கா பேணிச்சர் பலெஸ்,

(ஆர்ப்பிக்கோ உற்பத்திப் பொருட்களின் விற்பனையாளர்கள்)

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன் : 24186

# சனி மாற்றமும் பலாபலன்களும்

(நேற்றைய தொடர்ச்சி)

சிங்கம்:

இந்த இராசி இலக்கினகாரர்களுக்கு இவர் ஆறும் ஏழாம் –(ரணரோகண, களத்திர) ஸ்தானங்களின் அதிபதியாக உள்ளார். இவருடைய தந்தையாகிய சூரியபகவானுடைய வீடாகஇருந்தும் தீயவராகவே சனிபகவான்இருக்கிறார் இந்த இரண்டு அமைப்புகளும் முக்கியமான ஸ்தானங்கள் என்பதையே குறிக்கும். இதனால் இந்த இராசி இலக்கினத்தை உடையவர்களின் ஜெனன அமைப்பில் சனிபகவான் நல்ல அமைப்பைப்பெற வேண்டியது அவசியமாகும். கோசாரத்திற்கு மூன்றில்இருப்பது ஓரளவு நன்மையே. இருந்தாலும் ஜாதக அமைப்பு எப்படியென்று ஜோதிடரின் ஆலோசனையைப் பெறவும். இவர்களுக்கு கடந்த ஏழரை வருடங்களாக சனிபகவான் எப்படி எப்படியெல்லாம் ஆட்டிப்படைத்தார் என்பதில் இருந்தே இவர்கள் சனியின் வலிமையை அறியலாம். இந்த சனிமாற்றத்துடன் இந்த ஏழரைச் சனியன் இவர்களை விட்டுவிலகுகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கன்னி:

இவர்களுக்கு ஐந்தாம், ஆறும்–(புத்திர.ரணரோகண) ஸ்தானத்திற்கு அதிபதியாக இருக்கிறார். அரைச்சுபர் என்றே கொள்ளவேண்டும். இந்த இராசி நாதனுக்கு நண்பன் என்பதும் சிறிது ஆறுதல். கோசாரத்திற்கு 2ல் சனிபகவான் இருப்பது விசேடம் இல்லை என்றவிதியையும் கவனித்தல்வேண்டும். எனவே சுபர்சேர்க்கை அல்லதுபார்வை பெற்று ஜெனன ஜாதகத்தில் அமைந்திருந்தால் நன்மையாகும். சுக்கிரனுடைய சேர்க்கை இருந்தால் சிறப்பாகவும், அல்லது குருபார்வை பெற்றிருந்தால் நன்மையான பலன்களைத் தருவார். எனவே ஜாதக அமைப்பைப்பொறுத்தேபலன்கள் அமையும். இவர்களுக்கு ஏழரைச் சனியின் நடுக்கட்டம் இதுவரை நடந்து தற்போது கடைசிக் கட்டத்திற்கு சனிபகவான் போகிறார். இனி கடந்த ஐந்து வருடங்களைப் போல் இருக்கும் என்று என்னாது இந்த இரண்டரை வருடங்களும் எப்படி என்பதை ஜோதிடர் மூலம் ஜாதக அமைபைக்கொண்டு அறியவும்.

துலாம்:

இவர்களுக்கு நான்காம், ஐந்தாம்– சுக–புத்திர ஸ்தானங்களுக்கு அதிபதியாக இருக்கும் இவர் இந்த வீட்டிற்கு யோககாரகனாகவும் இருக்கிறார். சனிபகவான் இந்த இராசி நாதன் சுக்கிரனுக்கு நட்புக்கிரகமாக இருப்பதும் நல்லது. எனவே சனிபகவான் எந்த ஸ்தானத்தில் இருக்கிறார் என்பது பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை தீமையானபலன் நடைபெற்றாலும் இடபஇராசி லக்கின காரர்களைப்போல இவர்களுக்கும் அது நன்மையாகவே இறுதியில்முடியும். ஜாதக அமைப்பின் சிறப்பு அம்சங்களைப் பொறுத்து விசேட நன்மைகள் அமையும். சுக்கிரனுடன் கூடியிருப்பின் இன்னும் விசேடம். இவர்களுக்கு இந்த சனிமாற்றம் ஏழரைச் சனியின் நடுப்பகுதி ஆரம்பிக்கிறதாகும். இந்தக் காலத்தில் இவர்கள் சனிபகவான் அதிக தீமைகள் செய்யமாட்டார் என நம்பியிருக்கலாம். தீமைகள் ஏற்படின் மற்றக்கிரக அமைப்புகளைப் பொறுத்ததே. எனவே ஜோதிடரிடம் ஆலோசனைபெற்று பலாபலன்களை அறிந்துகொள்ளவும்.

விருச்சிகம்:

இவர்களுக்கு மூன்றும், நான்காம்–(சகோதர சுக ஸ்தானங்களுக்கு உடையவர். இராசி நாதனாகிய செவ்வாய்க்கு இவர் விரோதி. இதனால் இவர் தீயவராகிறார். தேகசுகம், வசதிகள், உற்சாகம், வாகன வசதி, நடுத்தரக்கல்வி, உறவினர்கள், தாய், உடன் பிறப்பு, கூலியாட்கள், பிறர் உதவி, மனை, முதலிய முக்கிய விடயங்களின் பலன்கள் சம்பந்தப்படுவதால் இந்த இராசி லக்கினகாரருக்கும் சனிபகவான் முக்கியமானவராகிறார். 7½சனியின் முதலாவது கட்டம் ஆரம்பமாவதாலும், தீயவராக வருவதாலும் ஜெனன ஜாதக அமைப்பை அனுசரித்தே பலன்கள் அறியவேண்டும்.

தனுசு:

இவர்களுக்கு இரண்டாம், மூன்றும் –தனம்,கல்வி,வாக்கு சகோதரம் போன்ற ஸ்தானங்களிற்கு உடையவர் இராசி நாதனாகிய குருவுக்கு சனி பகவான் சமமாக உள்ளார். பேச்சுவார்த்தை பகமை அன்னியர் உதவி, உணவு, பணவருவாய் கல்வி அபிவிருத்தி, சகோதர நன்மை, பிரயாண வசதிகள், ஆள் அடிமை. ஆடைஆபரண அணிகள் சேர்க்கை போன்ற விடயங்கள் சம்பந்தப்படுவதால் இவையும் முக்கியமான இடங்களாக கருதப்படுகின்றன. கோசார ரீதியாக சனிபகவான் 11ல் சஞ்சரிப்பது நல்லது, இந்த வீட்டை சனிபகவான் 3ம் பார்வையால் பார்ப்பது கவனிக்கப்படல் வேண்டும், ஜெனனகால அமைப்பில் குருபகவான் இந்த வீட்டில் இருந்தால் திறமையான பலன்களையே இந்தமாற்றம் செய்யும்– இருந்தும் ஜெனனகால கிரகங்களின் அமைப்பை பொறுத்தே பலன்களை அறியவும்.

மகரம்:

இவர்களுக்கு இரண்டாம், முதலாம்– தனம், வாக்கு ஜென்மம்) ஸ்தானங்களுக்கு அதிபதியாக இருக்கிறார். இவர் இராசி நாதனாகவும், தனஸ்தானாதிபதியுமாகையால் இவர் யோககாரனாகிறார். குடும்பஸ்தானாதிபதியாகையால் இவர் ஜெனன ஜாதகத்தில் 6ல், 8ல் 12ல் மறையாது இருத்தல் அவசியம் தீயகிரகங்கள் சேர்க்கை பெறாது இருத்தல் வேண்டும். களஸ்திரகாரனாகிய சுக்கிரன் சேர்க்கை பெற்றிருந்தால் நல்லது, கோசாரத்திற்கு 10ல் வருகிறார். நெருக்கடி.தொழில் சிக்கல்கள், நாணயம் தவறுதல் போன்றபாதிப்பை ஜாதக அமைப்பில் தீதாக இருந்தால் ஏற்படுத்துவார். எனவே அவர் அவர் ஜெனன ஜாதகத்தை ஆராய்ந்து பலன்களை அறியவும்!

கும்பம்:

இவர்களுக்கு பன்னிரெண்டாம், முதலாம்– (விரையம், ஜெனனம்) ஸ்தானங்களுக்கு உரியவாகிறார் இராசிநாதனாகிய இவர் விரைய ஸ்தானாதிபதியாவதாலும் தீயவராகிறார். அந்திம சயனஸ்தானங்களின் அதிபதியாவதாலும் முக்கியமானவராக இவரை இந்த இராசி லக்கின காரர்கள் இவரை முக்கியமானவராகக் கவனித்தல் வேண்டும். கோசாரரீதியில் 9ல் சனிபகவான் சஞ்சரிப்பதும் விசேடம் இல்லை. எனவே ஜெனன ஜாதக அமைப்பைப் பொறுத்து பலனை அறியவும். கெட்டவன் கெட்டால் கிட்டும் ராஜயோகம் என்ற வாக்கியத்தையும் இங்கு ஆராய்தல் வேண்டும். திரிகோணம். கேந்திரம் அமைப்புகள் இருந்தால் நன்மையாகும் அல்லது புதன் சேர்க்கைபெற்று ஜெனனஜாதகத்தில் இருப்பின் அதுவும் இவர்களுக்கு நன்மையாகும். ஆகவே ஜோதிடரின் ஆலோசனைகளைப் பெறவும்.

மீனம்:

இவர்களுக்கு பதினோராம், பன்னிரெண்டாம் (லாபம் விரையம்] ஸ்தானங்களுக்கு அதிபதியாகின்றார், லாபம் கூடியும் விரையம் குறைந்தும் உள்ள அமைப்பைப் பெற்றிருந்தாலே நன்மையை இவர்கள் எதிர்பார்க்கலாம், ஜாதக அமைப்பைப் பொறுத்து இவர்களை உயர்த்தவோ தாழ்த்தவோ முடியும். இந்த ராசிக்காரருக்கு கோசாரத்திற்கு சனிபகவான் அட்டமத்தில் வருகிறார். இவருடன் வியாழனும் சேர்ந்து இரண்டு வாரத்திற்குமேல் அட்டமத்தில் நிற்கிறார்கள். எனவே சற்றுவிழிப்பாகவும் அவதானமாகவும் இருக்கும்படி எச்சரிக்கை செய்வதால் அவர் அவரின் ஜாதக அமைப்பைஆராயவேண்டியது அவசியமாகும். அதன்பிரகாரம் அமைப்பை ஆராயவேண்டியது அவசியமாகும். அதன் பிரகாரம் பலாபலனை இவர்கள் அறிந்து நடக்காவிடில் பிரதிபலன்களை உணரவேண்டிவரும்.

தத்தம் ஜாதக அமைப்புகளைக்கொண்டு சிறந்த ஜோதிடரின் ஆலோசனையைப்பெற்று அறிதல் வேண்டும். இவை இராசிக்கும் லக்கினத்திற்கும் பொருந்தக் கூடியனவாகஇருப்பதையும் வாசகர்கள் கவனித்து பலாபலன்களை அறியவும், தீமையான பலன்களை எதிர்நோக்குபவர்கள் சனிபகவானுக்கு சனிவாரம் விரதம் அனுஷ்டித்தல், எள்ளுஎண்ணை எரித்தல், காகத்திற்கு எள்ளு சாதம் வைத்து உண்ணல் கறுப்பு வஸ்திரம் குடை முதலியன தானம் செய்தல்தினசரி உணவு அருந்த முன்னர் ஒரு பிடி 'காக்கா'வுக்கு வைத்து விட்டு உண்ணுதல், நவக்கிரக சிந்தனை செய்தல் குறிப்பாக சனிபகவானை வழிபடுதல் செய்வதோடுஆஞ்சநேயனையும் வழிபாடு செய்வது நல்லது சனிபகவானுக்கு ஸ்தோத்திரம் செய்பவர்கள் முதலில் ஆஞ்சநேயரையும் துதிப்பது அவசியம். இவர்கள் ஆஞ்சநேயருக்கு நல்லெண்ணை, விளக்கெண்ணெய், வேப்பெண்ணை ஆகிய முக்கூட்டு எண்ணையில் தீபம் ஏற்றி, ஆஞ்சநேயரின் மார்பில் பசும் வெண்ணெய் வைத்து, கர்ப்பூர தீபஆரத்தி, அர்ச்சனைகள் செய்வது, விசேடமான சுபபலன்களைக்கொடுக்கும் – நடைபெறஇருக்கும் தீமைகள் ஆஞ்சநேயரால் பஞ்சுபோல் பறக்கடிக்கப்படும்.

சித்தி சோதிடர் ச. குலசூரியர்

எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு
விசேட கழிவுடன் தவணைமுறையில்
★ சொனி (Sony)
★ நாஸனல் (National)
★ சன்யோ (Sanyo)
✶ சீரு (Seira) டெலிவிஷன்களை
பெற்றுக்கொள்ளவும்.
சென்னை ரூபவாகினி ஏரியல்
உத்தரவாதத்துடன் பொருத்திக்கொள்ளவும்.
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்,
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்,
யாழ்ப்பாணம்.

## "பாராளுமன்ற பதவிக்காலம் நீடிப்பு:

# ஜனநாயக சக்திகள் எதிர்க்க வேண்டும்"

– கோவை மகேசன்

(கொழும்பு)

சிறிலங்கா நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க யூ. என் பி. அரசு எடுக்கும் முயற்சிகளை நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.

தமிழக விடுதலை அணி செயலாளர் திரு கோவை மகேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் அங்கம்வகிப்பதன் மூலம் தமிழீழ விடுதலையை வென்றெடுக்கமுடியாது என்பதில் தமிழீழவிடுதலை அணி திடமான உறுதிபூண்டுள்ளது. ஆயினும், குடியாட்சிமரபு மீது நம்பிக்கைகொண்டவர்கள் என்கிற முறையில் சிறிலங்கா நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க யூ. என் பி அரசு எடுக்கும் முயற்சிகளை நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.

"முந்திய அரசு செய்தது போல, நாடாளுமன்றத்தேர்தலை ஒரு நிமிடம்கூட நீடிக்க விடமாட்டோம் என்று இதுகாலவரை கூறிவந்த யூ என். பி. அரசு, இன்று தேர்தலை நடத்தாது பாராளுமன்றப் பதவிக்காலத்தை நீடிக்கமுயற்சிப்பதை ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்றுபட்டுஎதிர்க்க வேண்டும். (க)

## வங்காலையில் பாரதி விழா

(வவனியா)

பாரதி நூற்றாண்டு விழா வங்காலையில் மிகவும்சிறப்பாக நடைபெற்றது மன்னார் — அரசாங்க அதிபர் திரு, டி. வாமதேவன், மன்னார் எம்,பி. திரு பி சூசைதாசன், அபிவிருத்திசபை தலைவர் திரு. எம், செபமாலை ஆகியோர் உரை நிகழ்த்தினர் விழாவில் மலர் வெளியீடும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

## விபத்தில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம்]

பஸ்– சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியானார்.

கல்வியன் காட்டைச் சேர்ந்த வி. மரியதாஸ் (50 வயது) என்பவரே மரணமானவராவார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

தனியார் ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்றும் இவர் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகி, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். (ம)

## தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சை

யாழ்ப்பாணம்]

1980– 81 தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை–வர்த்தக தராதரப் பத்திர உயர் நிலை, கீழ்நிலை பரீட்சையிலும் தொழிற்கற்கைளிலான தேசிய தராதரப் பத்திரப் பரீட்சைகளிலும்; ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பரீட்சை இன்று ஆரம்பித்து இம்மாதம் 13-ந் திகதி வரை நடைபெறுகிறது. [உ)

## பெயர்ப்பலகை வழிகாட்டி

[வவனியா]

ஆஸ்பத்திரி, நீதிமன்றம் போன்ற இடங்களில் பெயர் பலகை வழிகாட்டிகளை அமைப்பதற்கு மன்னார் அபிவிருத்தி சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (க)

## 'போனஸ்' வழங்கப்படும்

புதுடில்லி அக் 31

தமிழ்நாடு மின்சாரசபை ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு 6 கோடி 85 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

நவம்பர் மாதம் 8–ம் தேதி வழங்கப்படவிருக்கும் இந்த போனஸால் 83 ஆயிரம் ஊழியர்கள் பயனடைவார்கள். (க]

## யாருடையது

நல்லூர் கல்யாண மண்டபத்தடியில் திறப்புக்கோவையொன்றை திரு எம். வேலாயுதபிள்ளை என்பவர் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட நீராவியடி கிருஷ்ணன் கலை மன்றத்தினரின் 'இலங்கை வேந்தன்' இசை-நடன நாடகத்தில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் சு. வித்தியானந்தன் சிறப்புரையாற்றுவதையும், அருகில் மன்றத் தலைவர் திரு. முத்துராஜரத்தினம் நிற்பதையும், நாடகத்தின் ஒரு காட்சியையும் இங்கு காணலாம்.

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

சமய, இலக்கியக்கலைவிழா ஒன்று இன்று காலை விக்ரு கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. திரு. விக்ரு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் எம் பி திரு. வெ. யோகேஸ்வரனும்அவரது பாரியாரும் கலந்து கொள்ள உள்ளனர்.

கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை நா குழந்தைவேலு நா. இராசையா இராச சம்பந்தன் ஆகியோரின் சொற்பொழிவும் காரை சுந்தரம்பிள்ளை தலைமையில் சொல்லடி சிவசக்தி என்னும் பொருளில் கவியரங்கும் நடைபெறவுள்ளன. நாட்டியநிகழ்ச்சி நகைச்சுவைக்கதம்பம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனா
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஷா நவாஸ் - சுமதி
பாதை மாறிய பருவங்கள்
விரைவில்! எம்.ஜி.ஆர்.
நவரத்தினம் (கலர்)

றீகல் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சில தினங்கள் மட்டும்
முரட்டுக்காளை
[கலர்]

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 15-ம் திகதி
திங்கட்கிழமை
(1—11—82)

மேடம்: வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் துறையில் வேலைகள் அதிகரிக்கும். உடல்நலம் பாதிக்கப்படலாம். சுகாதாரம் வேண்டும்,

இடபம்: இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

மிதுனம்: நினைச்த காரியத்தில் தடை ஏதாவது தவிர்க்க முடியாததாகும். சிலரின் கண்களுக்கு இலக்காக நேரிடும். மனத்திடம் விரும்பத்தக்கது.

கடகம்: மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன் தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம், அதனால் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும்.

சிங்கம்: இதயத்தில்மகிழ்ச்சி தோன்றும், உறவு முறைகள் இறுக்கமாக இருக்கும், முதியவர் ஒருவரின் தொடர்பால் புதிய பாதை ஏற்படும். புத்திர வழிச் சுகமும் உண்டு.

கன்னி: பணத்தைக் கொடுத்து பகையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில்துறையில் சோர்வு தென்படும். பரோபகாரசிந்தை மேலிடும். அமைதியே நன்று.

துலாம்: வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும், காதல் விவகாரங்கள் கலகலப்பை ஏற்படுத்தும். இல்லத்தில் சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இன்று சுபதினம்.

விருச்சிகம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத வகையில் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். இன்று விபத்துக்கும் இடமேற்படலாம்.

தனு: இன்று கவர்ச்சிகரமானதினம். பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், இன்று பொது மக்களின் மதிப்பும் உயரும்.

மகரம்: ஆராய்ச்சியில் அதிக ஆர்வம் பிறக்கும். விளைபொருள் விருத்திக்கும் இடமுண்டு. முயற்சியால் முன்னேற்றமும் உண்டாம்.

கும்பம்: அதிட்டமான நாள் சிலர் வாழ்க்கையில் திரவிய லாபமும் கிடைக்கலாம் இன்று உங்கள் வீட்டில் சுபகருமம் ஒன்று இடம்பெறும்.

மீனம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும் சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## டி.ஐ.ஜி. குணதிலகா மீண்டும் சேவையில்?

(கொழும்பு)

கட்டாயவிடுமுறையில் இருந்து வந்த பிரதிப்பொலிஸ் மா அதிபரான திரு. திரெல் குணதிலக்கா பாதுகாப்பமைச்சின் பணிப்பொன்றை யடுத்துமீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

திரு. குணதிலக்கா லண்டன் நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றில் திருடியதாக அங்கு குற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து அவருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது.

லண்டன் நகரில் திரு. திரெல் குணதிலக்கா மீது குற்றஞ் சுமத்திய வர்த்தக நிலையத்தின் பிரதான சாட்சியான அதன் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் மீதும் தற்போது அங்குதிருட்டுக்குற்றச்சாட்டொன்று சுமத்தப்பட்டுள்ளது.

தமக்கெதிராக லண்டன் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் விதித்த தீர்ப்பினையடுத்து மேன்முறையீடு செய்தபோது தோல்வியடைந்த திரு. குணதிலக்கா தற்போது தமது குற்றச்சாட்டுக்களின் பிரதான சாட்சி குற்றவாளியாகக்காணப்பட்டுள்ளதையடுத்து தமது நிலையைமேலும் தெளிவாக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளாரெனத் தெரிய வருகின்றது.

லண்டனில் இருந்து வெளியாகியுள்ள அறிக்கையொன்றில் திரு. திரெல்குணதிலக்காவின் மீதான குற்றச்சாட்டுக்களின் பிரதான சாட்சியான பாதுகாப்பு அதிகாரி குற்றவாளியாகக் காணப்படும்பட்சத்தில், நேர்மையற்ற ஒருவரால் சாட்சிசொல்லப்பட்டதாலேயே திரு. குணதிலக்கா குற்றவாளியாகக் காணப்பட்டாரென லண்டன்மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டக்குறிப்பொன்றை வெளியிடுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

மனோகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார்-ஜெய்கணேஷ்-லதா-சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு
விசேட ஒழுங்குசெய்து
தரப்படும்

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி 6-15 9-15, சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
இரகசியப் பொலிஸ் 115
(கலர் - புதிய பிரதி)

WINDSOR (Jaffna) Daily 5 Shows
'RISE AND FALL OF IDI AMIN'
Murder, Rape and Torture — More than 500,000 people brutally murdered during IDI AMIN'S Rule———
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்——
உகண்டா ஜனாதிபதி இடி அமினின் எழுச்சியும் வீழ்ச்சியும்--

போயா தினத்தையொட்டி
இன்று
சினிமாக் காட்சிகள் இல்லை

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

## யாழ். நூலகத்துக்கு ஜனாதிபதி நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது சன நூல் நிலைய புனரமைப்புக்கென ஜனாதிபதி நிதியிலிருந்து 11 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜே. ஆர், ஜெயவர்த்தன யாழ்ப்பாணம் மேயர் திரு இராசா விஸ்வநாதனுக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஏற்கனவே 9லட்சம் ரூபா யாழ் நூல் நிலைய புனரமைப்புக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. (மா)

## நெஞ்சம்மறவாத அம்மையார்



''மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'' என்பதற்கு இலக்கணமாய் மனைமாட்சியில் மிக சிறப்புடையவராய் விளங்கியவர். அமரர் மங்கையர்க்கரசி செல்லத்துரை அம்மையார். அவர் குடும்பப் பற்றும் இறைபற்றும் முதிர்ந்தவராய்த் திகழ்ந்தவர். எப்பொழுதும் அன்னார் பொன் நகையிலும் புன்னகை பூண்டவராய் அன்புள்ளம் கொண்டவராய் இன்சொல், இன்செயல் மூலம் அனைவரதும் உள்ளத்தைக் கவர்ந்தவர். தருமமே தலைகாக்கும் என்பதைத்தாரக மந்திரமாக இறுதி மூச்சுவரை கடைப்பிடித்து வாழ்ந்தவர். வீடு வந்தவர் பார்த்திருக்க உண்ணாதவர். இயன்றதை அன்புடன் பகிர்ந்து கொள்பவர். மங்கையர் போற்றும் மங்கயர்க்கரசியாக மாண்புடன் வாழ்ந்தவர்.

மங்கையர்க்கரசி (அம்பிகை) அம்மையாரின் திடீர் மறைவு அவரை அறிந்தவர்களுடைய இதயத்தைப் பெரிதும் துயரத்தில் ஆழ்த்தி விட்டது. மனைக்கு விளக்காகத் திகழ்ந்த மங்கையர்க்கரசி அம்மையாரை அமலன் அழைத்து விட்டார். அம்மையாரின் ஆன்மா சாந்தியடைய திருவருளைப் பிரார்திப்போமாக.

—துரை ஆரோக்கியதாசன்

# “குடியாட்சி அமைப்புக்கு குழிதோண்டும் முயற்சி!”

## பாராளுமன்றப் பதவிக்காலம் நீடிப்பு தமிழீழ விடுதலை அணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற சிறிலங்காவின் குடியரசுத் தலைவரின் தேர்தலை அடுத்து, சிறிலங்காவின் குடியரசுத்தலைவர் தம் மீது தம் மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதன் காரணமாக அடுத்த பொதுத் தேர்தலை நடத்தாது பாராளுமன்ற பதவிக்காலத்தை நீடிக்கும் நோக்குடன் பொதுமக்கள் வாக்கெடுப்பை நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள செய்தி; தமிழீழமக்கள் என்ற முறையில் நாம் இவ் விஷயத்தில் முழுமையாக அக்கறை கொள்ளாவிடினும் சிறிலங்காவில் குடியாட்சி அமைப்புக்கு குழிதோண்டும் முயற்சியாக நடைபெறும்- குடியாட்சி மரபுக்கு முரணான இச்செயலை வன்மையாக தமிழ் ஈழ விடுதலை அணி கண்டிக்கின்றது”.

தமிழீழ விடுதலை அணியின் தலைமைச் செயற்குழுக்கூட்டம் அதன் யாழ். பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது; மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மான விபரம் வருமாறு:

“சிறிலங்கா வேறு, தமிழ் ஈழம் வேறு என்ற கோட்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள நாம, சிறிலங்காவில் நடைபெறும் குடியரசு தலைவர் தேர்தலை ஒட்டியோ பாராளுமன்ற அமைப்பை ஒட்டியோ நம் எல்லை மீறி கவனம் செலுத்தத் தேவையில்லை. ஆனாலும் எமது அயல்நாட்டு மக்களின் அரசியல் வாழ்வுக்கு அழிவு தரும் முறையில் குடியாட்சி அமைப்புகள் சிதறடிக்கப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

“சிறிலங்காவின் ஆதிக்கத்திலிருந்து எம்மைவிடுவிக்க நாம் உறுதிபூண்டு செயற்படுகின்ற போதிலும் சிறிலங்காவின் ஆதிக்கம் எம்மீது தொடர்ந்து திணிக்கப்பட்டு வரும் இவ்வேளையில் குடியாட்சியமைப்புக்கு ஏற்ப பொதுத் தேர்தலை நடத்தாது பொதுமக்கள் வாக்கெடுப்பு என்ற பெயரில் முழு அதிகாரவெறியோடு சிறிலங்காவின் குடியரசுத்தலைவர் அதிகாரம் செலுத்த முற்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

“இப்பொதுசன வாக்கெடுப்பைக் கண்டிக்கும் முறையில் தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை வெளியிட்டிருப்பது மேலெழுந்த நிலையில் வரவேற்கக்கூடியதெனினும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அண்மைக்கால அரசியல்போக்கினை கூர்ந்து கவனித்து வருபவர்கள் என்ற முறையில் இவர்கள் தெரிவிக்கும் கண்டனம் வெறும் வாயளவில் இருக்கப் போகின்றதா அல்லது செயலளவில்வடிவம்பெறப் போகின்றதா என்பதே பெரும் கேள்வியாக இருக்கின்றது!

இன்றைய சிறிலங்கா அரசு பொதுத்தேர்தலை நடத்தாது பொதுசன வாக்கெடுப்பை நடத்துவதென தீர்மானிப்பின் தமிழர் விடுதலைக் கூட்டணி தமது பாராளுமன்றப் பதவிகளைத் துறந்து தமிழ்ப்பொதுமக்களின எதிர்ப்பு இயக்கத்தை வெளிப்படையாக நடத்துமா? இன்றைய இதநிலையின் அரசியல் அமைப்பின்படி தமிழர்விடுதலைக்கூட்டணி தம் பாராளுமன்றப் பதவிகளைத் துறப்பதாலு ஏற்படும் பாராளுமன்ற வெற்றிடங்களுக்கு தம் கட்சி சார்பில் எவரையும் நியமிக்காத நிலையில், ஆளும் ஐக்கியதேசியக் கட்சி வெற்றிடங்களுக்கு தனது ஆட்களை நியமித்து நிரப்பமுடியாது. தமிழீழ விடுதலை வேட்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உண்மையில் நம்பிக்கை வைத்திருப்பின் இதனைச் செய்யவேண்டும்.”

‘தமிழ் மக்களின் உரிமைக் குரலான ‘சுதந்திரன்’ தடை செய்யப்பட்டதையும், தமிழ் ஈழ விடுதலை முகத்தின் சார்பில் மட்டக்களப்பில் திரு யோகன் கண்ணமுத்து பகிஷ்கார துண்டறிக்கையை வெளியிட்டதற்காக அவர்களை விளக்கமறியலில் வைத்ததையும் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஹோம் பினான்ஸ்லிமிட்

கீழ்க்கண்ட பொருட்களை விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- பாவனையிலிருந்து விலக்கப்பட்ட பஸ் டயர்கள்—16
- 5லிட்டர்அளவுடைய வெற்று எண்ணை டப்பாக்கள்—49

கேள்விப்பத்திரங்கள், சீல் பண்ணப்பட்ட கவரில் எமது விலாசத்திற்கு 82-11-10ம் திகதி காலை 10 மணிக்கு முன்பு கிடைக்க வேண்டும்.

முகாமையாளர்
ஹோம் பினான்ஸ் லிமிட்,
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி;24310

## சிறிமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருப்பதாக அறியப்படுகிறது. திரு விஜயகுமாரதுங்காவும் இவ்விடயம் குறித்து ஒன்றுமே தெரியாது என்று சி ஐ டி பொலிஸாரிடம் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, போலிக்கூப்பன் புத்தக விநியோகம் சம்பந்தமாக தேடப்பட்டுவந்த அமைச்சின் முக்கிய அதிகாரி ஒருவர் வெளிநாடு சென்றுவிட்டதாக பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப் படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு இன்றுகூடும்போது, இவ்விஷயமும் பரிசீலனைக்கு எடுக்கப்படவிருக்கிறது.

## பாக். ஜனாதிபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1972ம் ஆண்டிற்குப்பின்னர் பாகிஸ்தான் தலைவரொருவர் இந்தியாவிற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். (வெ)

## பனைமரம்--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக்காலை பத்துமணியளவில் உறவினர் ஒருவரின் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்வதற்காக திருநெல்வேலியைச் சேர்ந்த இவர்கள் முத்துத்தம்பி வித்தியாசாலைக்கருகாமையில் உள்ள பிள்ளையார் கோவிலில் கூடி நின்றனர். கீரிமலை செல்வதற்குஒழுங்குசெய்யப்பட்ட வான் ஒன்றும் தயாராக இருந்தது. காற்றுடன் பலத்த மழை பெய்துகொண்டிருந்தநேரம் இருஇளைஞர்கள் வானுக்குள் ஏறுவதற்கு ஓடிச் சென்றபோது பனைமரம் முறிந்து இருவர் மீதும் வீழ்ந்தது. மகேசுரன் என்பவர் ஸ்தலத்தில் மரணமானார். செல்வராசா படுகாயமடைந்தார்.

பொலிசார் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைநடத்தினர். [மா]

# இப்படியும் நடக்கிறது

யாழ். பல்கலைக்கழகம்.

புதிய கல்வி ஆண்டு ஆரம்பமாகிறது.

ஒரு அப்பாவி புதிய மாணவன் பழைய மாணவர்களின் கண்களில் சிக்கிக்கொள்ளாமல் பதுங்கிப் பதுங்கி ஒழித்துச் செல்கின்றான். அந்தோ பரிதாபம் ... அப்பாவியை 7, 8 சிரேஷ்ட மாணவிகள் கண்டுவிட்டார்கள் அம்மாணவனுக்கு உண்மையிலேயே நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. வழமைபோல் பேர், ஊர் எல்லாம் விசாரித்து கடைசியில் ஒரு மாணவி இன்னோர் மாணவியைக் காட்டி “அவளுக்கு எத்தனை மாக்ஸ் போடலாம்?” என்று கேட்க, மாணவன் என்ன சொல்வதென்றே தெரியாமல், மனம் கலங்கி, சமாளித்துக்கொண்டான். “35 மாக்ஸ் போடலாம்” என்று கூற, “ஐயோ பாவம், 35 மாக்ஸ் என்டால் இப்ப 35 தோப்புக்கரணம் போடனும்” என்று அந்த மாணவிகள் கட்டளையிட்டனர். என்ன செய்யலாம். எதுவுமே கூறமுடியாமல் அந்த அப்பாவி மாணவன் 35 தோப்புக்கரணம் போட்டுவிட்டு நகர்ந்தாராம்!

வழக்கமாக பழையமாணவர்கள்புதியமாணவர்களையும் புதிய மாணவிகளையும்தான் ‘ருகிங்’ செய்வதுண்டு இங்கு மாறாக,பழையமாணவிகள் புதிய மாணவனை ‘ருகிங்’ செய்திருக்கின்றனர்!

பாரதியார் நூற்றாண்டு நடக்கிறது ஒருவேளை பாரதி கண்ட சம உரிமை நினைவு, சிரேஷ்ட மாணவிகள் மனதில் பளிச்சிட்டுவிட்டதோ?

‘ஊடுருவி’

சில்லாலை கொலைவழக்கு:

# குற்றப்பத்திரம் தாக்கலாக்க பொலிசாருக்கு உத்தரவு

(மாவிட்டபுரம்)

சில்லாலை கோடரி வெட்டு கொலைச்சம்பவம் குறித்து றிமாண்டில் வைக்கப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ள சந்தேகநபர் மீது டிசம்பர் 13ம் திகதி குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்யுமாறு மல்லாகம் நீதிபதி காங்கேசன் துறைப் பொலிசாருக்குஉத்தரவிட்டுள்ளார்.

சில்லாலையைச் சேர்ந்த பிரான்சிஸ் சுகுணராஜா என்பவர் குடும்ப விவகாரமொன்றின் எதிரொலியாகக் கோடரியால் கோரமாக வெட்டப்பட்டுக் கொலையுண்டசம்பவம் தொடர்பாக ஜோசெப் சார்ள்ஸ் மரியான் என்பவர் சந்தேகத்தின் மீது கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டிருந்ததுடன் இவர் மனநோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கொடை மனநோய் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.

றிமாண்டிலிருந்தவாறே சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட மேற்படிநபர் சுகமடைந்ததையடுத்து மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜரான சமயம் இவர் மனநோய் குணமடைந்து விடயங்களை அறிந்து செயல்படக்கூடிய நிலையிலிருப்பதால் இவர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யலாமெனத் தெரிவிக்கப்பட்டது

இதனையடுத்துப் பதில் நீதிபதி திரு. ஜி. வி பாலசிங்கம் சந்தேகநபர் மீது டிசம்பர் 13ந் திகதி குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்யுமாறு காங்கேசன்துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டார்

சந்தேகநபர் சார்பில்சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், செல்வி மாலினி இராஜரத்தினம் ஆகியோர் ஆஜராகினர். (அ)

பெண் ஆசிரியர்கள் கருத்தரங்கு:

# மே. ஜேர்மன், மலேசிய பிரதிநிதிகள் இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் ஆசிரியர் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக மலேசியாவைச் சேர்ந்த திரு. குர்னாம் சிங்கும், மேற்கு ஜேர்மன் தொழிற்சங்கவாதி திரு. ஸ்டெபன் குரூபட்டும் இன்று யாழ். வருகிறார்கள்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், பிரெடரிச் ஈபேர்ட் மன்றம், சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து இலங்கையில் பெண் ஆசிரியர்கள் பற்றிய இக்கருத்தரங்கை இன்று நடாத்துகின்றது இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு டி. எஸ். கே. யணசிங்கா தலைமையில ஆரம்பமாகும் இக்கருத்தரங்கில் மலேசியாவில் இருந்து யாழ் வரும் இடரு ஆசியப் பிரதிநிதி திரு குர்னாம்சிங் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

பிரெட்ரிச் ஈபேர்ட் மன்றத்தின் பிரதிநிதியும், மேற்கு ஜேர்மன் பிரபல தொழிற்சங்கவாதியுமான திரு ஸ்டெபன் குரூபட் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

திருமதி அனோர்த்த ஸ்டெபன் குரூபேட் மங்கள விளக்கேற்றி இக்கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்.

மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாக நடைபெற இருக்கும் இருக்கருத்தரங்கில் நாட்டின் பல பாகத்திலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 பெண் ஆசிரியர்களுடன், தாதிகள், பெண் லிகிதர்கள், தொலைபேசி இயக்குநர்கள் பங்கு பற்றுகிறார்கள் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த மகாசிவம் இக்கருத்தரங்கின் அமைப்பு வேலைகளைக் கவனித்துவருகின்றார்.

# இந்திராவுக்கு சென்னையில் மகத்தான வரவேற்பு

சென்னை, அக், 31

ஆந்திரா பிரதேச விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

விமானநிலையத்தில் இவரை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன், தமிழ்நாடு ஆந்திரா காங்கிரஸ் தலைவர் திருமதி மரகத சந்திரசேகரம். மாநில அமைச்சர் சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

அரைமணி நேரம் சென்னை விமான நிலையத்தில் தங்கிய பிரதமமந்திரி பின்னர் புதுடில்லி புறப்பட்டார். (வெ)

ஹோம் பினான்ஸ் லிமிட்
(யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பினான்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பினான்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பினான்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பினான்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.ஐ. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.